<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | IA.01/2022 in ID.7/2020, ID.8/2020, ID.16/2020, ID.49/2020, ID.126/2021 | சாட்சியம் | **:** | **RW1** |
| **Name** | **:** | சம்பத் | | | |
| **Date** | **:** | **16.12.2024** | | | |
| **Time** | **:** | **1.18 p.m to 1.34 p.m** | | | |

<u>எ.த.சா.**1.**திரு.சம்பத் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

எதிர்மனுதாரர் சங்கத்தில் ராயல் என்ஃபீல்டு தொழிலாளர்கள் யாரும் தற்சமயம் உறுப்பினர்களாக இல்லை என்றால் சரியல்ல. நான் என்னுடைய சாட்சியத்தில் சங்கத்தின் இன்றைய உறுப்பினர்கள் யார் என்ற விவரத்தை சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லி இருக்கிறேன். அதற்கு ஆதாரமாக ஈ-படிவம் தாக்கல் செய்துள்ளேன். நான் மனுதாரர் நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை தொழிற்சங்கத்தில் தான் துணைத் தலைவராக உள்ளேன். இந்த தொழிற்தாவா எழுப்பப்பட்ட சமயத்தில் சங்கத்தின் தலைவர் குசேலர் மற்றும் நான் தவிர மற்ற ஐந்து உறுப்பினர்கள் மனுதாரர் நிறுவனத்தில் தொழிலாளர்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கு அல்லாமல் ஐந்து தொழிலாளர்கள்/சங்க நிர்வாகிகள் சேர்ந்து டி.சி.எல் இடம் 3 வழக்குகளும் ஜே.சி.எல் இடம் 2 வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் ஆமாம். டி.சி.எல் மற்றும் ஜே.சி.எல் முன்பு தாக்கல் செய்யப்பட்ட

வழக்குகள் திரும்ப பெறப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என்றால் நினைவில்லை. இந்த நீதிமன்றத்தில் உள்ள ஐந்து வழக்குகளில் மூன்று வழக்குகள் இடமாற்றம் சம்பந்தப்பட்டது என்றாலும் அவற்றில் 99 சதவிகித தொழிலாளர்கள் மீண்டும் பணிக்கு திரும்பி விட்ட காரணத்தினாலேயே வழக்குகள் மேல் நடத்த வலியுறுத்தப்படவில்லை என்ற காரணத்தினால் சங்க நிர்வாகிகள் வழக்கை வலியுறுத்த வில்லை என சொல்லி மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அதுபோன்று மனுவை சங்கம் தாக்கல் செய்யவில்லை. மூன்று வழக்குகளில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் இந்த வழக்கை மேல் நடத்த என்னை அணுகினார்களா என்றால் அணுகினார்கள். யார் யார் என்னை அணுகினார்கள் என்ற விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலம் சாட்சியத்தில் சொல்லவில்லை. மூன்று வழக்குகளில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை அழைத்து அவர்களின் கோரிக்கைகள் என்ன என்பது சம்பந்தமாக கேட்டிருக்கிறேனா என்றால் கேட்டுள்ளேன். இந்த இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்ட பிறகு தொழிலாளர்களை அழைத்து அவர்கள் இந்த வழக்கை மேல் நடத்த விரும்புகிறார்களா அவர்களின் நிலை என்ன அந்த தொழிலாளர்களின் விவரம் ஆகியவற்றை சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் செலுத்தும் மாத சந்தாவை நிர்வாகமே சம்பளத்தில் பிடித்து தொழிற்சங்கத்திற்கு அனுப்புவார்கள் என்றால் தொழிற்சங்கம் நிர்வாகத்திற்கு கோரிக்கை வைத்து அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் அவ்வாறு பிடித்தம் செய்து அனுப்பி வைப்பார்கள்.

தொழிலாளர்கள் அவ்வாறு சந்தா தொகையை பிடிக்கும் செய்ய இசைவு கொடுக்கும் பட்சத்திலேயே பிடித்தம் செய்ய இயலும் என்றால் ஆமாம்.

தொடாச்சி வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2024.12.20 18:36:47 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:16.12.2024.